**சிறப்பு நீதிமன்றம் (வனவழக்குகள்) நாகர்கோவில்.**

முன்னிலை : **திருமதி. M. சிவசக்தி, L.L.M.,**
சிறப்பு நீதிபதி.

2023-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19-ம் நாள் சனிக்கிழமை

**இடையீட்டுமனு எண்.19/2023**
**இன்**
**<u>அசல் வழக்கு எண்.94/2019</u>**

1. கண்ணன்
2. ராஜம்
3. விக்னேஷ்
4. விக்னேஸ்வரி

... மனுதாரர்கள்/ 2 மற்றும் 5 முதல் 7 பிரதிவாதிகள்

..எதிர்..

1. கீதா
2. ஆனந்த்
3. குமார்

... எதிர்மனுதாரர்கள்/வாதி/ 1 மற்றும் 4 பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. கனகமணி ராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. L. ராஜதுரை அவர்கள் முன்னிலையாகியும், 2, 3 எதிர்மனுதாரர்களை அழைத்தும் ஆஜராகாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், மனுவை நன்கு பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும் :

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது, மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டி, உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 8 விதி 1(A)(3) மற்றும் பிரிவு 151-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

இந்த மனுதாரர்கள் அசல் வழக்கில் 2 முதல் 7 பிரதிவாதிகள் ஆவர். இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரய ஆவணம், தீர்வை ரசீது, வீட்டு வரி ரசீது, தண்ணீர்வரி ரசீது, நிலவரி ரசீது, உயில் ஆவணத்தின் சாட்சியான பத்மநாபன் கொடுத்த பிரமாண பத்திரம், பாகபத்திரம், மின்கட்டண ரசீது ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளனர். இந்த ஆவணங்களை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. பதிலுரையின் சுருக்கம் :**

இந்த மனு சட்டப்படிக்கும் பொருண்மைபடிக்கும் நிலைக்கத்தக்கது அல்ல. மனு பிரமாணபத்திரம் பத்தி 3ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகிறது. இந்த வழக்கு பிரச்சினைக்கு தொடர்பு இல்லாத மற்றும் மனுதாரர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணங்களை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த கூடுதல் ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளிக்க மனுதாரர்களுக்கு தகுதி இல்லை. மனுவில் சொல்லப்பட்டுள்ள ஒளிநகல்களை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள இயலாது. இந்த ஆவணங்கள் போலியாக தயாரிக்கப்பட்டவை ஆகும். அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாததற்கு காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவென்றால்,
மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா ?

5. மனு, பதிலுரை மற்றும் வாதுரைகள் பரிசீலிக்கப்பட்டன. கட்டளை 8 விதி 1 (A) 3 கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது,

> *(3) A document which ought to be produced in Court by the defendant under this rule but is not so produced shall not without the leave of the Court, be received in evidence on his behalf at the hearing of the suit.*

மேற்கண்ட விதியிலிருந்து ஆவணங்களை தாக்கல் செய்யவேண்டிய பிரதிவாதி, இந்த விதியின்கீழ் தாக்கல் செய்யாத நிலையில், பின்னிட்டு நீதிமன்ற அனுமதியில்லாமல் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியாது என குறிப்பிட்டிருப்பது புலப்படுகிறது.

6. இந்த அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கையில், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் 08.06.2023 அன்று நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருப்பதும், வா.சா.1-ன் குறுக்குவிசாரணை 14.06.2023 அன்று முடிக்கப்பட்டிருப்பதும், வாதி தரப்பு வாய்மொழி சாட்சியம் 16.06.2023 அன்று மூடப்பட்டு இந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், இந்த 1ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக 22.06.2023 அன்று விசாரிக்கப்பட்டிருப்பதும், 4ம் பிரதிவாதி பி.வா.சா.2 ஆக 12.07.22023 அன்று விசாரிக்கப்பட்டிருப்பதும், 2ம் பிரதிவாதி பி.வா.சா.3 ஆக 18.07.2023 அன்று விசாரிக்கப்பட்டு தற்போது பி.வா.சா.3-ன் முதல்விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தாவில் இருப்பது புலப்படுகிறது.

நமது மேலமை நீதிமன்றம் பல முன் தீர்ப்புகளில், நீதிமன்றத்தில் ஒரு ஆவணம் தாக்கல் செய்யப்படும் பொழுது அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அந்த ஆவணங்களின் சாட்சிய மதிப்பு குறித்தோ, அந்த ஆவணங்களுக்கும் வழக்கிற்கும் உள்ள தொடர்பு குறித்தோ, அல்லது அந்த ஆவணங்களின் உண்மைதன்மை குறித்தோ, கட்டளை 8 விதி 1(A) 3-ன்கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக்களில் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என தீர்ப்பு பகரி உள்ளது நாம் அனைவரும் அறிந்ததே. அதேபோல் எந்த ஒரு நபருக்கும் அவருடைய தரப்பு கட்சியினை முழுமையாக எடுத்துரைக்க வாய்ப்பு அளிக்க வேண்டுமென்பது பொது விதி.

எனவே இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் தொடர்பு குறித்து இந்த மனுவில் விவாதிக்க இயலாது என்றும், இந்த ஆவணங்களின் தொடர்பு குறித்தும், உண்மைதன்மை குறித்தும் ஆட்சேபணை செய்ய 1ம் எதிர்மனுதாரருக்கு சதந்திரம் அளிக்கலாம் என இந்த நீதிமன்றம் கருதி, கட்டளை 8 விதி 1(A)3-ல் நீதிமன்றத்தின் அனுமதியுடன்தான் பின்னிட்ட ஆவணங்களை பிரதிவாதி தாக்கல் செய்யமுடியும் என

குறிப்பிட்டுள்ளதால், மனுவில் கண்ட ஆவணங்களை காலதாமதத்தை மன்னித்து நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளலாம் என்றும், இதனால் 1ம் எதிர்மனுதாரருக்கு எந்தவித நஷ்டமும் ஏற்படாது என்றும் இந்த நீதிமன்றம் கருதி, இந்த மனுவை அனுமதித்து மனுதாரர்களுக்கு ஆதரவாக விடை காணப்படுகிறது.

முடிவாக இந்த மனு அனுமதிக்கப்பட்டு (Subject to proof and relevancy) உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

2023-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19-ம் நாள் என்னால் இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

(ஒம்/- M. சிவசக்தி)
சிறப்பு நீதிபதி,
நாகர்கோவில்.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை
1ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

(ஒம்/- M. சிவசக்தி)
சிறப்பு நீதிபதி,
நாகர்கோவில்.

வரைவு/சீரான உத்தரவு
இ.ம.எண். 19/2023
அ.வ.எண்.94/2019
நாள்: 19.08.2023.